தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(23.07.2022 முதல் 27.07.2022)

அறிக்கை எண்: 58/2022 தேதி: 22.07.2022

## அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 °செ முதல் 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும் பதிவானது.

## அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (23.07.2022 முதல் 27.07.2022)

| கடந்த வார வானிலை (19.07.2022 முதல் 21.07.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (23.07.2022 முதல் 27.07.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 19/07 | நாள்-2 20/07 | நாள்-3 21/07 | தேதி | நாள்-1 23/07 | நாள்-2 24/07 | நாள்-3 25/07 | நாள்-4 26/07 | நாள்-5 27/07 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 10 | 7 | 7 | 8 | 7 |
| 35 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 35 | 35 | 35 | 35 |
| 26 | 27 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 27 | 27 | 26 | 26 |
| 4 | 4 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 67-40 | 69-49 | 71-42 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-40 | 70-40 | 60-50 | 70-50 | 60-50 |
| 15 | 14 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 7 | 8 | 8 | 8 | 8 |
| வட மேற்கு | வட வட மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | மேற்கு |

## அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 23.07.2022, முதல் 27.07.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-8 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களுக்கு லேசான மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் வயல்களில் உள்ள பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு தவிர்க்கலாம் அல்லது மிதமான அளவில் தண்ணீர் பாய்ச்சலாம் |
| நெல் | குறுவை நெற்பயிரில் 40ம் நாள் களைகளை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| நெல் | | தற்போது நிலவும் தட்பவெப்பநிலையின் காரணமாக தண்டு துளைப்பானின் தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 20 இசி 500 மி.லி / ஏக்கர் அல்லது புரொபனோபாஸ் 50 இசி 400 மி.லி/ ஏக்கர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

குறுவை நெற்பயிரில் 40ம் நாள் கைக்களை எடுக்கவும்.

**இயக்குநர்**